# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதிவிசேஷமானது

අංක 2035/19 - 2017 සැප්තැම්බර් මස 06 වැනි බදාදා - 2017.09.06

*2035/19 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 06 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) – பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**தேசிய அரசுப் பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டம்**

*15 (1) ஆம் பிரிவின் கீழான கட்டளை*

பெருநகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சராகிய பாட்டலீ சம்பிக்க சணவக்க ஆகிய நான், தேசிய அரசுப் பேரவையினால் அமுலாக்கப்பட்ட 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகாரசபை சட்டத்தின் 15(1) ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களை அடிப்படையாகக் கொண்டு, மஹரகமை நகரசபை எல்லைக்குட்பட்ட கீழே அட்டவணையில் தெளிவாக விபரிக்கப்பட்டுள்ள காணிகளை இன்று முதல் அமுலுக்கு வரும் வகையில் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் ஆதிக்கத்துக்கு உட்படும் என இக்கட்டளை மூலம் உரித்தாக்குகின்றேன்.

பாட்டலீ சம்பிக்க ரணவக்க (பா.உ),
பெருநகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர்.

பெருநகரம் மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சு,
17 மற்றும் 18 ஆம் மாடிகள்,
“சுஹுருபாய”,
பத்தரமுல்லை,
2017, ஓகத்து 29.

**அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், மஹரகமை பிரதேச செயலாளர் பிரிவில், மஹரகமை நகரசபை எல்லைக்குட்பட்ட கொட்டாவை கிராமத்தில் அமைந்துள்ள காணியானது, வடக்கே: ஹைலெவல் வீதி மற்றும் பூ.மா.இ. 3380 இன் காணித்துண்டு இல. 2 இனையும்; கிழக்கே: எம். வீ. விலியம் மற்றும் ஏனையோரினால் உரிமை கோரப்படும் கலகொடவத்த என்றழைக்கப்படும் காணியையும்; தெற்கே: பூ.மா.இ. 3380 இன் காணித்துண்டு இல. 2 இனையும்; மேற்கே: பூ.மா.இ. 3380 இன் காணித்துண்டு இல. 2 இனையும் எல்லைகளாகக் கொண்டு பதிமூன்று தசம் ஆறு (13.6) பேர்ச் விஸ்தீரணமுடைய காணியாகும். இக்காணியானது நில அளவையாளர் நாயகத்தால் 1969.06.19 இல் தயாரிக்கப்பட்ட பூர்வாங்க மாதிரிப்பட இல. 997 இனைக் கொண்ட மாதிரிப்படத்தில் காணித்துண்டு இல. 01 எனக் காட்டப்பட்டுள்ளது.

9 - 492


1 A - G26203 - 27 (2017/9) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.
இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.